**இனிமையான குழந்தைகளே! தந்தை மற்றும் சக்கரத்தை நினைவு செய்யுங்கள் வாயினால் எதையும் பேசுவதற்கான தேவை இல்லை. இந்த நரகத்தில் இருந்து மட்டும் மனதை விலக்கி வைத்து விடுவீர்களானால் நீங்கள் சதா நோயற்றவராக ஆகி விடுவீர்கள்.**

கேள்வி: பாபா நேரடியாக வந்து தம்முடைய குழந்தைகளின் சிரேஷ்ட பிராலப்தத்தை (பலனை) உருவாக்குவதற்காக எந்த ஓர் அறிவுரை தருகிறார்?

பதில்: குழந்தைகளே, இப்போது உங்களுடைய அனைத்தும் அழிந்துவிடப் போகின்றன. எதுவுமே பயன்படாது. அதனால் குசேலரைப் போல் தங்களின் வருங்கால பிராலப்தத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். பாபா நேரடியாக வந்துள்ளார் என்பதால் அனைத்தையும் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளுங்கள். மருத்துவமனையுடன் இணைந்த கல்லூரியைத் திறந்து வையுங்கள். அதனால் அநேகருக்கு நன்மை ஏற்படட்டும். அனைவருக்கும் வழி சொல்லுங்கள். ஸ்ரீமத் படி சதா நடந்து கொண்டே இருங்கள்.

ஓம் சாந்தி. எல்லையற்ற தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைத்துக் கொண்டு இருக்கிறார். யார் புத்தியற்றவர்களாக உள்ளனரோ, அவர்களுக்குத் தான் புரிய வைக்கப்படுகிறது. நீங்கள் அறிவீர்கள், நிச்சயமாக அனைவரும் தூய்மையற்றவர்கள். அவர்கள் பதீத-பாவனரை (தூய்மை படுத்துபவரை) நினைவு செய்கின்றனர். தூய்மை இல்லாத மனிதர்களை நிச்சயமாக புத்தியற்றவர்கள் என்று தான் சொல்வார்கள். அனைவரும் அழைக் கின்றனர், ஹே பதீத-பாவனா வந்து எங்களை தூய்மை யாக்குங்கள் என்று. பாரதவாசி களுக்குத் தெரியும், சத்யுகத்தில் இந்த பாரதம் தூய்மையாக இருந்தது. தூய்மையான இல்லற தர்மம் இருந்தது. இச்சமயம் தூய்மை இல்லாத இல்லறம் அதர்மமாக உள்ளது. தூய்மையானவர்கள் தான் தர்மாத்மா எனச் சொல்லப்படுகின்றனர். இந்த பாரதத்தில் 5000 ஆண்டுகளுக்கு முன் லட்சுமி-நாராயணரின் இராஜ்யம் இருந்த போது அது தூய்மையான இராஜ்யம் எனச் சொல்லப் பட்டது. நரன், நாரி இருவரும் தூய்மையாக இருந்தனர். பாபா அமர்ந்து புரிய வைக்கிறார், அரைக்கல்பமாக பக்தி மார்க்கம் நடைபெற்றுள்ளது. ஜபம்-தபம் முதலியன செய்வது வேதங்களை மனனம் செய்வது, இவையனைத்தும் பக்தி மார்க்கம். இதனால் யாரும் என்னை அடைய முடியாது. தந்தையாகிய என்னை அறிந்து கொள்ளவே இல்லை. இவை யனைத்தும் நேரத்தையும் சக்தியையும் வீணாக்குவதாகும். துவாபர யுகத் திலிருந்து பக்தி மார்க்கம் ஆரம்பமாகின்றது. பிறகு தேவதைகள் வாம (விகார) மார்க்கத்தில் செல்கின்றனர். லட்சம்-கோடிக்கணக்கில் செலவு செய்து தேவதைகளுக்குக் கோவில் கட்டுகின்றனர். சோமநாதர் ஆலயம் எவ்வளவு வைர-வைடூரியங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது! அந்தச் சமயத்தின் கணக்கின் படி கோடிக்கணக்கில் பணம் செலவு செய்யப் பட்டிருக்காது. ஏனென்றால் அச்சமயமோ வைர-வைடூரியங்கள் முதலியவற்றின் விலை அதிகமாக இருந்திருக்காது. இச்சமயம் அந்தக் கோவில் இருக்குமானால் எண்ணற்ற கோடிக் கணக்கான சொத்தாக ஆகி விடும்.

இப்போது பாபா புரிய வைக்கிறார், இனிமையான குழந்தைகளே, வேத சாஸ்திரங்களை மனனம் செய்வது என்பது பக்தியாகும். அது ஞானம் எனச் சொல்லப்பட மாட்டாது. சத்யுகத்தில் தீர்த்தம் முதலியவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. கங்கை-யமுனை நதிகளோ சத்யுகத்திலும் கூட உள்ளன, இப்போதும் உள்ளன. சத்யுகத்தில் யாரும் புண்ணிய நதி என சொல்வதற்கான நதிகள் என்று எதுவும் கிடையாது. பாபாவோ ஞானக்கடலாக இருக்கிறார். அவர் அமர்ந்து ஞானம் தருகிறார். அரைக்கல்பமாக இந்த பக்தி நடைபெறு கின்றது. முதலில் கலப்படமற்ற பக்தி உள்ளது. சிவனுக்கு மட்டுமே பூஜை செய்கின்றனர். பிறகு தேவதைகளுக்குப் பூஜை செய்கின்றனர். இப்போதோ பக்தி கலப்படமாக ஆகி விட்டுள்ளது. பக்தி செய்து கொண்டு, சாஸ்திரம் முதலியன படித்துக் கொண்டே இருக்கின்றனர் என்றால் அனைவரும் பக்தர்கள் ஆகின்றனர். மணமகள்கள் ஒரே மண மகனாகிய என்னை நினைவு செய்கின்றனர். பக்தர்களைக் காப்பவர் பகவான். ஆக, நிச்சயமாக பக்தியில் கஷ்டம் ஏற்படுகிறது. அதனால் தான் சொல்கின்றனர், வந்து எங்களை விடுவியுங்கள், துக்கத்திலிருந்து விடுவியுங்கள், வழிகாட்டி ஆகி முக்திதாமத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்கின்றனர். பகவான் யார் என்று அவர்களுக்குத் தெரியாது. சிவன் அல்லது சங்கரின் ஆலயம் செல்கின்றனர். சிவனையும் சங்கரையும் ஒன்றாக ஆக்கி விட்டனர். இருவரும் வேறு வேறு. அவர் நிராகார், இவர் சூட்சும சரீரதாரி. அவர் மூல வதனத்தில் இருப்பவர், இவர் சூட்சும வதனத்தில் இருப்பவர். ஆக, பாபா புரிய வைக்கிறார், கோவிலில் காளைமாட்டைக் காட்டு கின்றனர். சிவ-சங்கர் காளைமாட்டின் மீது சவாரி செய்ததாகப் புரிந்து கொண்டுள்ளனர். இப்போது சிவன் சர்வவியாபி என்று சொல்கின்றனர். சிவசங்கர் சர்வவியாபி என்று சொல்ல மாட்டார்கள். ஒரே நிராகார் பரமபிதா பரமாத்மாவைச் சொல்கின்றனர். இப்போது பாபா சொல்கிறார், பாருங்கள், நான் நிராகார் உங்களுக்கு எப்படிக் கல்வி கற்பிக்கிறேன்! காளைமாட்டின் மீதெல்லாம் சவாரி யாரும் செய்வதில்லை. எனது சவாரி காளைமாட்டின் மீது ஏன் காட்டப்பட்டுள்ளது? நானோ சாதாரண மனிதரின் உடலில் பிரவேசமாகி வருகிறேன். இவருடைய 84 பிறவிகளின் கதையை அமர்ந்து உங்களுக்குச் சொல்கிறேன். நீங்களும் வந்து பிரம்மா முகவம்சாவளி ஆகியிருக்கிறீர்கள். இவரது பெயர் பாகீரதன், அதாவது பாக்கியசாலி ரதம். ஏனென்றால் முதல்-முதலில் இவர் கேட்கிறார் மற்றும் இவரே சௌபாக்கியசாலி. சத்யுகத்தில் மிகவும் கொஞ்சம் பேர் தான் இருப்பார்கள். மற்ற ஆத்மாக்கள் அனைவரும் தங்களின் வீட்டுக்குத் (சாந்தி தாம்) திரும்பிச் சென்று விடுவார்கள். அங்கிருந்து தான் வந்தார்கள். இது கர்ம சேத்திரமாகும். சிருஷ்டியின் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. மூலவதனம் மற்றும் சூட்சுமவதனத்தில் சத்யுக திரேதா யுகம் கிடையாது. இந்த டிராமாவின் சக்கரம் இங்கே தான் சுற்றுகிறது. அரைக்கல்பம் ஞானம் சத்யுக-திரேதா, அரைக்கல்பம் பக்தி துவாபர-கலியுகம். சத்யுகத்தில் லட்சுமி-நாராயணரின் இராஜ்யம் இருந்தது. பிறகு லட்சுமிநாராயணர் முதலாமவர், இரண்டாமவர் இப்படியே இராஜ்யம் நடைபெறுகின்றது. திரேதாவில் சந்திரவம்சி இராமரின் இராஜ பரம்பரை. சத்யுகத்தில் 8 பிறவிகள், திரேதாவில் 12 பிறவிகள். இந்த 84 பிறவிகளின் கதையை பாபா தான் புரிய வைக்கிறார். பாபா தம்முடைய பிராமணக் குழந்தைகளோடு தான் சந்திக்கிறார். வேறு யாரோடும் அல்ல. குழந்தை களாக ஆகியுள்ளனர், அதனால் அவர்களுக்குக் கற்பிக்கிறார். பாபா சொல்கிறார் - நான் உங்களுடைய தந்தை-ஆசிரியர்-சத்குருவாக இருக்கிறேன். சத்கதி அளித்து

என்னோடு அழைத்துச் செல்கிறேன். தூய்மையாவதற்கான மிக சுலபமான உபாயத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இங்கே அமர்ந்து கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? குழந்தைகள் சொல் கின்றனர் - பாபா, நாங்கள் உங்களை நினைவு செய்கிறோம். உங்கள் கட்டளை - நிரந்தரமாக என்னை நினைவு செய்வதற்கான புரு^ôர்த்தம் செய்வீர்களானால் இந்த யோக அக்னி மூலம் உங்களுடைய விகர்மங் கள் விநாசமாகி விடும். பிறகு நீங்கள் தூய்மையான சதோபிர தானமாக ஆகி விடுவீர்கள். இப்போது நீங்கள் தமோபிரதானமாக இருக்கிறீர்கள். நினைவின் மூலம் தான் கறை நீங்கும். எந்த ஒரு கஷ்டத்தின் வி^யமும் கிடையாது. சதா நோயற்றவராக ஆவதற்கு எவ்வளவு சகஜ உபாயம்! தேவதைகள் ஒரு போதும் நோய்வாய்ப் படுவதில்லை. இந்த நினைவின் மூலம் தான் நீங்கள் நோயற்றவராக ஆவீர்கள். பாவங்கள் பஸ்மமாவதால் நீங்கள் தூய்மையாகி விடுவீர்கள். மிகப் பெரிய வருமானமாகும். நடந்து சுற்றி வாருங்கள், ஆனால் என்னை மட்டும் நினைவு செய்யுங்கள். முதலில் இந்தப் பயிற்சி செய்ய வேண்டும். நினைவு செய்வதன் மூலம் நாம் 21 பிறவிகளுக்கு நோயற்றவராக ஆகி விடுவீர்கள். எந்த ஒரு கஷ்டத்தின் வி^யமும் கிடையாது. என்னை மட்டும் நினைவு செய்யுங்கள். இதை பாபா ஆத்மாக்களுக்குச் சொன்னார் - ஹே ஆத்மாக்களே, கேட்கிறீர் களா? பாபா வாயினால் சொல்கிறார் - என்னை நினைவு செய்யுங்கள், வீட்டை நினைவு செய்யுங்கள். இப்போது இந்த நரகம் முடிந்துவிடப் போகிறது. தங்களின் வீட்டுக்குப் போக வேண்டும். உணவு சமைக்கும் போதும் கூட நினைப்பதற்கான முயற்சி செய்யுங்கள். நீங்கள் கர்மயோகியாக இருந்தாலும் குறைந்தது 8 மணி நேரம் வரையாவது சென்று சேருங்கள். 5 நிமிடம், 10 நிமிடம், அரை மணி நேரம், இப்படியே சார்ட்டை அதிகப் படுத்திக் கொண்டே செல்லுங் கள். சோதித்துப் பார்த்துக் கொண்டே இருங்கள், நாம் பாபாவை எவ்வளவு நேரம் நினைவு செய்தோம்? அந்த பாபாவிடம் இருந்து சொர்க்கத்தின் இராஜ்யம் கிடைக்கிறது, 21 பிறவி களுக்கு சதா நோயற்றவராக ஆகிறோம். எவ்வளவு சகஜமான யுக்தி! சக்கரத்தின் ஞானம் புரிய வைக்கப் பட்டுள்ளது - உயர்ந்த பிராமணர்கள், தேவதைகள், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற இந்தச் சக்கரத்தை நினைவு செய்ய வேண்டும். விதை மற்றும் மரத்தை நினைவு செய்யுங்கள். இப்போது நீங்கள் அறிவீர்கள், ஒரு தர்மத்தின் ஸ்தாபனை ஆகிறதென்றால் மற்ற தர்மங்கள் விநாசமாகி விடும். சத்யுகத்தில் ஒரு தர்மம் மட்டுமே உள்ளது. உங்களுக்கு முயற்சியே இதில் தான். பாபா சொல்கிறார், விதையாகிய என்னை நினைவு செய்யுங்கள் மற்றும் மரத்தை நினைவு செய்யுங்கள். ஸ்தாபனை, விநாசம் மற்றும் பாலனை... இது மிகவும் சுலபம்.

சகஜ யோகம் மற்றும் சகஜ ஞானம். விதையிலிருந்து மரம் எப்படி வெளிவருகிறது? இதைப் பற்றிய ஞானம் உங்கள் புத்தியில் உள்ளது. இல்லறத்தில் இருங்கள், ஆனால் தூய்மையாக இருக்க வேண்டும். இதுவோ நல்லது தான் இல்லையா? பாபா சொல்கிறார், 63 பிறவிகளாக நீங்கள் நரகத்தில் மூழ்கி வந்திருக்கிறீர்கள். பாவம் செய்தீர்கள், இப்போது முற்றிலும் பாவாத்மா ஆகி விட்டிருக்கிறீர்கள். இராவணனின் வழிப்படி நடந்தே வந்திருக்கிறீர்கள்.

காந்தியும் கூட இராமராஜ்யம் வேண்டும் என்றார். இதன் அர்த்தம் அவர் இராவண இராஜ்யத்தில் இருந்தார் என்பது தான். மனிதர்களின் புத்தி எவ்வளவு அழுக்கடைந்ததாக ஆகி விட்டுள்ளது! எதையுமே புரிந்து கொள்வதில்லை. சொர்க்கம் எப்போது இருந்தது என்பது பற்றி யாருக்கும் தெரியாது.

லட்சுமி-நாராயணருக்கு 5000 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. இது யாருக்கும் தெரியாது. சத்யுகத்தின் ஆயுள் லட்சக்கணக்கான ஆண்டுகள் எனச் சொல்லி விடுகின்றனர். அரைக்கல்பம் ஞானம், அரைக்கல்பம் பக்தி. பிறகு எப்போது பழைய உலகமாக ஆகி விடுகின்றதோ, அப்போது வைராக்கியம் வருகின்றது. இந்த நரகத்தில் இருந்து மனதை விலக்கி வைத்து விடுகின்றனர்.

நீங்கள் இங்கே அமர்ந்தவாறே மிகுந்த வருமானத்தைச் சம்பாதிக்கிறீர்கள். பாபா சொல்கிறார் - நீங்கள் சக்கரவர்த்தி ராஜா ஆகிறீர்கள். இது உங்களுடைய கடைசி 84-வது பிறவி. விநாசம் முன்னாலேயே நின்று கொண்டுள்ளது. மரண உலகத்தின் விநாசம், அமர உலகத்தின் ஸ்தாபனை நடைபெற்றுக் கொண்டுள்ளது. அமரநாத் பாபாவிடமிருந்து நாம் சத்திய நாராயணன் ஆவதற்கான சத்திய கதையைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரே கதை தான். சாஸ்திரங்கள் முதலியன எவ்வளவு ஏராளமாக உருவாக்கியுள்ளனர்! கோடி - பல கோடி ரூபாய் செலவழிக்கின்றனர். அனைத்துமே பொய்யானவை. பாபா உண்மையைச் சொல்லி உண்மையான கண்டத்தின் ஸ்தாபனை செய்கிறார். எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கப்படுகின்றது! எப்படிப்பட்ட அபலை களாக இருந்தாலும் கணிகைகள், (விகாரி தொழில் செய்பவர்கள்) அகல்யாக்கள் (கல்புத்தி உள்ளவர்கள்) கூட அந்த சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆக முடியும். உங்களிடம் இப்போது என்ன மீதம் உள்ளது? அமெரிக்கா வில் என்ன இருக்கிறது? பெரிய-பெரிய மாளிகைகள் உள்ளன. இப்போதோ அவை விழுந்து விட்டது போôலத் தான். சொர்க்கத்திலோ அளவற்ற செல்வம் இருந்தது. இங்கோ செல்வம் எதுவும் இல்லை. அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் என்ன கொள்ளையடிப்பார்கள்? அங்கே எதுவும் கிடையாது. அங்கே சத்யுகத்திலோ ஏழையிலும் ஏழையின் மாளிகை கூட இங்குள்ளதை விட நன்றாக இருக்கும். அதில் வெள்ளி, தங்க மெல்லாம் பதிக்கப் பட்டிருக்கும். அங்கே அனைத்தும் மலிவாக இருக்கும். அனைவருக்கும் தங்களின் நிலம் இருக்கும். சுதாமாவின் உதாரணம் பக்தி மார்க்கத்தில் இரண்டு கைப்பிடி ஈஸ்வரன் பெயரால் கொடுத்தே வந்திருக்கிறீர்கள். சிலர் 5-10-100 ரூபாய் கூட தானம் செய்கின்றனர். அதற்கான பிரதிபலன் அடுத்த பிறவியில் கிடைக்கின்றது. அதனால் தான் மனிதர்கள் தான-புண்ணியம் முதலிய வற்றைச் செய் கின்றனர். யாராவது ஆஸ்பத்திரி திறக் கின்றனர் என்றால் அடுத்த பிறவியில் நல்ல ஆரோக்கியம் கிடைக்கிறது. எந்த ஒரு நோயும் இருக்காது. யாராவது கல்லூரி திறந்து வைக் கின்றனர் என்றால் அடுத்த பிறிவியில் படித்து சாமர்த்தியசாலி ஆவார்கள். ஒரு பிறவிக்கான பலன் அடுத்த பிறவியில் கிடைக்கும். இப்போது பரமபிதா பரமாத்மா நிராகார் தந்தையோ வள்ளல் ஆவார். பாபா சொல்கிறார், குழந்தைகளே, ஒரு மருத்துவமனையுடன் இணைந்த கல்லூரியைத் திறந்து வையுங்கள். இதில் அநேகருக்கு நன்மை ஏற்படும். இதற்கான பலன் உங்களுக்கு 21 பிறவி களுக்குக் கிடைக்கும். அது மறைமுகமாக ஒரு பிறவிக்கு மட்டும். இது நேரடியாக 21 பிறவி களுக்குப் பலன் கிடைக்கிறது. ஏனென்றால் இப்போது பாபா நேரடியாக வந்து அமர்ந்துள்ளார். உங்களுடைய அனைத்தும் அழிந்து போகும் எனப் புரிய வைக்கிறார். மாட-மாளிகைகள் அனைத்தும் மண்ணோடு மண்ணாகப் போய்விடும். அதனால் இப்போது வருங்காலத்திற்காக வருமானத்தைச் சேமியுங்கள். அது தான் உங்களுக்குப் பயன்படும். வருகிற அனைவருக்கும் வழி சொல்லுங்கள் - அதாவது பாபாவை நினைவு செய்வீர்களானால் உங்கள் கறை நீங்கி விடும்.

அவர் பரலௌகிகத் தந்தை. தந்தை சொல்கிறார், ஸ்ரீமத் படி நடப்பதன் மூலம் நீங்கள் சொர்க்கத்தின் எஜமானராக, பாரஸ் தங்க புத்தி உள்ளவராக ஆக முடியும். எவ்வளவு யுக்திகளைப் புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார்! ஒவ்வொருவரின் கர்மக் கணக்கு-வழக்கும் அவரவருடையதாகும். பாபா கர்ம-அகர்ம-விகர்மத்தின் கதியை அமர்ந்து புரிய வைக்கிறார். ஏதாவது கஷ்டம் என்றால் சர்ஜனிடம் வந்து ஸ்ரீமத் பெற்றுக் கொள்ளுங்கள். அகல்யாக்கள், கூனிகள் அனைவருக்கும் இந்த வழியைச் சொல்ல வேண்டும். தூய்மை மீது தான் தொந்தரவுகள் நடைபெற்றே வந்துள்ளன. விஷம் தரவில்லை என்றால் அடி கொடுக்கத் தொடங்கி விடுகின்றனர். வீட்டை விட்டு வெளி யேற்றி விடுகின்றனர். எவ்வளவு தொந்தரவுகள் செய்கின்றனர்! பாபா சொல்கிறார், இந்த ஞான யக்ஞத்தில் அசுரர் களின் விக்னங்கள் அதிகமாக வரும். அபலைகளுக்குக் கொடுமைகள் அதிகமாக நடைபெறும். மற்ற சத்சங்கங்களில் கொடுமைகள் நடைபெறுவதில்லை. இங்கே விக்னங்கள் ஏற்படுகின்றன. பாபா சொல்கிறார், எவ்வளவு தூய்மை இல்லாதவர்களாக ஆகி விட்டுள்ளனர்! இப்போது நீங்கள் தூய்மையாகிறீர்கள் - தூய்மையான உலகத்தின் எஜமானர் ஆவதற்காக. பாபாவின் கட்டளையாவது, இந்தக் கடைசிப் பிறவியில் தூய்மையானவர்களாகி என்னை நினைவு செய்வீர்களானால் விகர்மங்கள் விநாசமாகி விடும். இதன் பெயரே சகஜ இராஜ யோகம். மற்ற எந்த ஒரு சாஸ்திரத்திலும் இந்த யுக்தி கிடையாது. கீதையில் உள்ளது - தேகத்தின் அனைத்து தர்மங்களையும் தியாகம் செய்து விட்டு, தந்தையாகிய என்னை மட்டும் நினைவு செய்யுங்கள். இப்போது கிருஷ்ணரோ பகவான் இல்லை. பகவான் அனைத்து ஆத்மாக்களின் தந்தை ஒருவர் தான். சரீரத்தைக் கடனாகப் பெற்றுள்ளார். இது பாக்கியசாலி ரதம். இவருக்குக் குஷியோ இருக்கிறது - எனது சரீரத்தை பகவான் பயன்படுத்திக் கொள்கிறார். இந்த சரீரத்தில் பகவான் வந்து அனைவருக்கும் நன்மை செய்கிறார். மற்றப்படி காளைமாடு முதலியவை கிடையாது. இந்த வி^யங்களைப் புதியவர்கள் எப்படிப் புரிந்து கொள்வார்கள்? நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்தக் கடைசிப் பிறவியில் சம்பூர்ண தூய்மையானவர்களாகி பாபாவின் நினைவிலேயே இருக்க வேண்டும். இந்தப் தூய்மையற்ற உலகத்திலிருந்து மனதை விலக்கி விட வேண்டும்.

2. சுயதரிசனச் சக்கரதாரி ஆக வேண்டும். மருத்துவமனையுடன் கூடிய கல்லூரி திறந்து வைத்து அநேகருக்கு நன்மை செய்ய வேண்டும். ஒவ்வோர் அடியிலும் சுப்ரீம் சர்ஜனிடம் இருந்து ஸ்ரீமத் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வரதானம் : தெய்வீக புத்தியின் மூலம் திரிகாலதர்சி ஸ்திதியின் அனுபவம் செய்யக் கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக.

பிராமண வாழ்க்கையின் விசே^ பரிசு தெய்வீக புத்தியாகும். இந்த தெய்வீக புத்தியின் மூலம் தந்தையை, தன்னை மற்றும் மூன்று காலங்களை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். தெய்வீக புத்தியின்

மூலம் நினைவு, நினைவின் மூலம் சர்வசக்திகளையும் தாரணை செய்ய முடியும். தெய்வீக புத்தியானது திரிகாலதர்சி ஸ்திதியை அனுபவம் செய்விக்கிறது. அவர்கள் முன் மூன்று காலங்களும் தெளிவாக இருக்கும். முன்-பின் யோசித்து பிறகு பேச வேண்டும் என்று கூறுவர். பலனை அறிந்து கொண்டு காரியம் செய்யும் போது அவசியம் வெற்றி கிடைக்கும்.

சுலோகன்: யதார்த்த முடிவெடுக்க வேண்டுமெனில் ஆன்மீக போதையின் மூலம் கவலையற்ற ஸ்திதியில் நிலைத்திருங்கள்.